1979 மார்ச் 27]

திரு. க. சுப்பு: நான் பேசவில்லை. ஒரு சிறு விளக்கம் மட்டும். . . .

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: அவ்வாறு அனுமதி கொடுப்பதில்லை உட்காருங்கள். இந்தப் பிரச்சினை குறித்த எனது தீர்ப்பை பின்னர் அறிவிக்கிறேன்.

திரு எம்.ஏ. லத்தீப்: தலைவரவர்களே, நான் ஒரு வாரத்திற்கு முன்பே நம்முடைய அமைச்சர் திரு. ராஜா முகமது அவர்கள் மீது ஒரு உரிமை மீறல் பிரச்சினை கொடுத்திருந்தேன். உடனடியாக அது எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கலாம். ஆனால் இதுவரையில் அது எடுத்துக்கொள்ளப்படவில்லையே அதற்கு என்ன காரணம் என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: இப்போது மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே இல்லை. ஆகவே பிறகு இந்தப் பிரச்சினையை எடுத்துக்கொள்ளலாம்.

(5) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(அ) மாயவரத்தில் பல அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள் கைது செய்யப்பெறுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாயவரம் வட்டத்தில் சுமார் 1 மாத காலமாக பல்வேறு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் காவல் துறையால் கைது செய்யப்பட்டுவருவதாலும் இதைப் பயன்படுத்திக்கொண்டு சமூக விரோதிகள் சிலர் அனாமதேயக் கடிதங்கள் எழுதி பொது மக்களுக்கு எச்சரிக்கைவிட்டு அச்சுறுத்தி வருவதாலும் அப்பகுதி மக்களிடம் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவலல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு திரு இரெ. இராசமாணிக்கம் அவர்கள் தீர்மானம் கொடுத்துள்ளார். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*திரு இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினை குறித்து இந்த அவையினுடைய மற்றைய அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று நான் ஒரு தீர்மானத்தை இந்த அவையில் தந்திருக்கிறேன். சுமார் ஒரு மாத காலமாக

[திரு. இ. ரெ. இராசமாணிக்கம்] [1979 மார்ச் 27

மாயவரம் பகுதியில்—மாயவரம் பகுதியிலே மட்டுமல்ல தமிழகம் முழுவதும் கிட்டத்தட்ட 500-க்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். கைது செய்யப்பட்டவர்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். இன்னும் பல்வேறு கட்சியைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். பொதுவாக இரவு நேரங்களிலே வெளியிலே சென்றுவிட்டு வந்தால் கூட அவர்களை காவல் துறையைச் சேர்ந்தவர்கள் கைது செய்து காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்கிறார்கள். ஆகையால் பொதுமக்கள் இரவு நேரங்களில வெளியில் செல்வதற்குக் கூட பயப்படுகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு பதட்டமான சூழ்நிலை மாயவரம் பகுதியிலே ஏற்பட்டிருக்கிறது. காவல் துறையைச் சார்ந்தவர்களைக் கேட்கின்றபோது அவர்கள் சொல்வது முத்துகுமாரசாமி கொலை சம்பந்தமாக வசாரனை செய்வதற்கு அழைத்துச் செல்கிறோம் என்று சொல்கிறார்கள். கைது செய்வது தவறு என்று சொல்லவ்ல்லை. சந்தேகிக்கின்றவர்களை, கைது செய்யலாம். ஆனால் உண்மை குற்றவாளிகளை கண்டுபிடிக்கவேண்டும். அவர்களை தண்டிக்கவேண்டும் என்று 5—3—1979 அன்று நான் திருவாடுதுறை கிராமத் தலைவர் கொலை சம்மந்தமாக பேசிய போது இந்த மன்றத்தில் தெரிவித்திருக்கிறேன். ஆனால் அன்றைய தினம் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் பதில் அளித்துப் பேசுகிறபோது அந்தக் கொலை செய்த இடத்தில் துண்டு பிரசுரங்கள் இருந்தன என்றும், அதில் உள்ள வாசகங்களைப் பார்க்கும்போது தீவிர கம்யூனிஸ்ட் வாதிகளைக் கைது செய்யவேண்டிய சூழ்நிலைஏற்பட்டது என்றும் சொன்னார்கள். நான் சொல்லிக்கொள்வது துண்டு பிரசுரம் அங்கே இருந்தது, அதனால் தீவிர கம்யூனிஸ்டுகள் அந்த கொலையை செய்திருப்பார்கள் என்று நம்புவது நல்லது அல்ல. யாரோ ஒருவர் கொலை செய்து விட்டு தீவிர கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் அந்தக் கொலையைச் செய்திருப்பார்கள் என்று திசை திருப்புவதற்காக கூட இப்படிப்பட்ட துண்டு பிரசுரங்களை அந்த இடத்தில் போட்டிருக்கக்கூடும். கொலை செய்தவர் எவரும் எந்த தடயத்தையும் கொலை செய்த இடத்தில் போடமாட்டார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். நோட்டீசை வைத்துக் கொண்டு அந்த இயக்கத்தை சார்ந்தவர்களையோ அல்லது அந்த இயக்கத்திற்கு ஆதரவு அளிப்பவர்களையோ கைது செய்து காவவில் வைப்பது நல்லதல்ல என்பதையும் இந்த நேரத்தில் தெரிவ்த்துக்கொள்கிறேன். இதே சட்டமன்றத்தில் கூட எல்லா கட்சியைத் சேர்ந்தவர்களும் சிறைச்சாலையில் இருக்கக் கூடிய தீவிர கம்யூனிஸ்ட்களை விடுதலை செய்ய வேண்டும் என்று சொல்வியிருக்கிறார்கள். ஆகவே நான்

சொல்வது, குற்றம் செய்யாத நிரபராதிகளை, விடுதலை செய்ய வேண்டும். அந்த அடிப்படையில் அரசாங்கம் இதை அணுக வேண்டும் என்று இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். அதோடு இன்றைக்கு மொட்டை கடிதங்கள் அநாமதேய கடிதங்கள் அதிகாரிகளுக்கு வருகின்றன, பொதுமக்களுக்கும் வருகின்றன. என்ன அந்தக் கடிதத்தில் எழுதியிருக்கிறது என்று சொன்னால் ''நீ ஜாக்கிரதையாக இரு'' என்று எழுதப்பட்டிருக்கிறது. அதுவும் புதிய மதுவிலக்கு சட்டம் வந்த பிறகு இந்த மொட்டைக்கடிதங்கள் அதிகமாக வருகின்றன. இன்னார் சாராயம் காய்ச்சுகிறார்கள் அல்லது இன்னார் வீட்டில் சாராயம் இருக்கிறது என்றும், உடன டியாக அங்கு செல்லவேண்டும் என்றும் அந்த மொட்டை கடி தத்தில் எழுதுகிறார்கள். உடனே காவல் துறையைச் சார்ந்த வர்கள் அவர் வீட்டிற்கு சென்று சோதனையிடுகிறார்கள். ஆனால் அந்த வீட்டில் ஒன்றும் இல்லாது திரும்பி வருகிறபோது அந்த வீட்டில் உள்ளவர்களுடைய மனம் எந்த நிலையில் இருக்கும் என்பதை அரசாங்கத்தில் உள்ளவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். உண்மை குற்றவாளிகளை கண்டுபிடிக்க இந்த மொட்டைக்கடிதங்களை யார் எழுதுகிறார்கள், எங்கிருந்து அவைகள் வருகின்றன என்பதை முதலில் கண்டு பிடிக்க வேண்டும் என்று அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட நிலைமைகளை இன்றைய தினம் தமிழகத்தில் குறிப்பாக என்னுடைய பகுதியில் நடந்துகொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான் இந்தப் பிரச்சினையை தங்கள் மேலான கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறேன். அது மட்டுமல்ல. நம்முடைய பாராளுமன்ற உறுப்பினர் முருகையன் அவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அதோடு, நான் திருச்சி மத்திய சிறைச்சாலையில், மிசாக் கைதியாக ஓராண்டு காலம் இருந்தபோது வெங்கடாசலம் என்ற கம்யூனிஸ்ட் தலைவரும் இருந்தார். அவர் வெளியில் வந்த பிறகு சில நாள் கழித்து கொலை செய்யப்பட்டாரா அல்லது மறைக்கப்பட்டாரா என்பதைப் பற்றி இதுவரையில் காவல் துறையால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆகவே, உண்மையான குற்றவாளி யார் என்று தெரியவில்லை. உண் மையான குற்றவாளிகளை யார் என்று கண்டுபிடித்து, அவர் களை நீதிமன்றத்தில் நிறுத்தவேண்டும். அந்த வகையில் முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். உண்மையான குற்றவாளி என்று சொல்லுகிறபோது.....

[முற்பகல் 11-10]

இந்த மாதிரியான மொட்டைக் கடிதங்கள் அநாமதேயக் கடிதங்கள் எழுதக்கூடியவர்கள் யார் யார், இப்படிப்பட்ட காரியங்களில் யார் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்? இந்த சமூக

[திரு. இரெ. இராசமாணிக்கம்] [1979 மார்ச் 27

துரோகிகள் யார் என்பதை கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கவேண்டும். இவைகளை எல்லாம் கட்சியைச் சார்ந்தவர்களும் பேசி சுமுகமான நிலையை உருவாக்கவேண்டும். இந்த நிலையில் தமிழகத்தில் இனிமேலாவது இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க முடிவு காண வேண்டும். இதற்காக அவையில் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இதை விவாதிக்கவேண்டும் என்று கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ராஜமாணிக்கம் அவர்கள் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக்கொண்டு வந்து முக்கியமாக இப்படிப்பட்ட அநாமதேய கடிதங்கள் எழுதுகின்றவர்கள் யார் என்பதை கண்டுபிடிக்கவேண்டும் என்பதையும், நடைபெற்ற கொலைகளுக்கு உண்மையான குற்றவாளிகள் யார் என்பதை கண்டுபிடிக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்திச் சொன்னார்கள். மேலும் அவர்கள் சொல்கிற போது நிறையப் பேர்கள் கைது செய்யப்படுகின்றார்கள். இதனால் பொதுமக்கள் இரவு நேரத்தில் வெளியே செல்வதற்குப் பயப்படுகிறார்கள் என்றும் குறிப்பிட்டார்கள். நான் அவருக்குச் சொல்லவிரும்புவது, போலீசார் கைது செய்வதினாலா இப்படிப்பட்ட அநாமதேய கடிதங்கள் வருவதாலா என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், 26-2-1979 அன்று மாலை 7 1/2 மணியளவில் பேராவூரில் திருவாடுதுறை கிராம அதிகாரி தண்டபாணிபிள்ளை மகன் முத்துக் குமாரசாமி கொலை செய்யப்பட்டுள்ளார். அவ்விடத்தில் நக்சலைட்டுகள் முழக்கங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள் கைப்பற்றப் பட்டன.

இது நக்சலைட்டுகள் சம்பந்தப்பட்ட கொலை என சந்தேகப் பட்டு பாலையூர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப் பட்டு புலனாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளன. 12-3-1979, 14-3-1979, 17-3-1979 ஆகிய நாட்களில் திருவாடுதுறை மடத்திலுள்ள ஏஜன்டான குப்புப்பிள்ளை மகன் விசுவநாத பிள்ளைக்கும், நன்னிலம் வட்டம் கீழ் வெளிப்படுகையைச் சேர்ந்த சீனிவாச வன்னியன் மகன் கணேசனுக்கும், திருவாடுதுறை மடத்தின் பண்டார சன்னதிக்கும் கையொப்பமிடாத மிரட்டல் கடிதங்கள் வந்துள்ளன. இதுபற்றி குத்தாலம் காவல் நிலையத்திலும், பாலையூர் காவல் நிலையத்திலும் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு புலனாய்வுவில் உள்ளன.

19-3-1979 அன்று நாகப்பட்டிணத்தில் திரு. எ. கல்யாண சுந்தரம் என்ற வழக்கறிஞருக்கு நக்சலைட்டுகளால் எழுதப்பட்டதாகத் தோன்றும் மிரட்டல் கடிதம் கிடைக்கப்பெற்றுள்ளது.

இது சம்பந்தமாக நாகப்பட்டிணம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு புலனாய்வில் உள்ளது.

இவர்கள் அனைவருக்கும் காவல் துறையினால் பாதுகாபபு கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே காவல் துறையினர் கட்சித் தலைவர்களை கைது செய்வதால் தான் மிரட்டல் கடிதங்கள் வருகின்றன என்று கூறுவது சரியல்ல. அரசு இதுபற்றி தகுந்த நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்த அடிப் படையில்தான் சில கைதுகள் செய்யப்படுகின்றனவே தவிர, அரசியல் கட்சி தலைவரவர்களை கைது செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் அல்ல என்பதை சட்டப்பேரவை உறுப்பி னர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்போது நிலைமை கட்டுக்கு அடங்கியிருக்கிற காரணத்தினால் சட்டமன்ற இதர அலுவல்களை ஒத்தி வைத்து இதை விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்ற காரணத் தினால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

(ஆ) திருவண்ணாமலை அருகில் துரிஞ்சாபுரத்தில் தடியடிப் பிரயோகம் செய்யப்பெற்று, விவசாயிகள் கைது செய்யப் பெற்றுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வட ஆற்காடு மாவட்டம், துரிஞ்சாபுரம் கிராமத்தில் 25-3-1979-ல் 44 விவசாயிகளைக் கைது செய்ததின் காரணமாக திருவண் ணாமலை கோட்டாட்சித் தலைவர் அவர்களை சந்தித்து மனுக் கொடுக்க ஊர்வலமாகச் சென்ற விவசாய சங்கத்தைச் சேர்ந்தவர்களை 26-3-1979 அன்று கோட்டாட்சித் தலைவர் அலுவலகம் முன் கண்ணீர்ப்புகை வீசியும் தடியடிப் பிரயோ கம் செய்தும் 198 விவசாயகளைக் கைது செய்து வழக்குப் போடப்பட்டும் இருப்பதால் அந்தப் பகுதியில் விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டும் என்று கேட்டு திருவாளர்கள் பெ.சு, திருவேங்கடம், திரு. த. வேணுகோபால், கூத்தகுடி ச. சண்முகம், எஸ். சிவ சாமி, சேலம் மு. ஆறுமுகம், ஜே. ஜேம்ஸ், பொ. விஜயராகவன், ஏ. ஆர். மாரிமுத்து, துரை முத்துச்சாமி, கோ. இளங்கோவன் வீ. கே. கோதண்டராமன், ஆர். உமாநாத், சி. கோவிந்த